

வேலூர் மாவட்டம் காட்பாடி வட்டம் மகிமண்டலம் சித்தேரி ஏரியை மேம்படுத்தும் பணி மற்றும் ரூ.2.50கோடி மதிப்பீட்டில் குடியாத்தம் மற்றும் கே.வி.குப்பம் வட்டத்தில் உள்ள மோர்தானா இடதுபிரதான கால்வாயை புனரமைக்கும் பணிக்கு கல்வெட்டினை மகிமண்டலத்தில் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்தார். உடன்நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், மாவட்ட ஆட்சியர் வே. இரா.சுப்புலட்சுமி, குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமலுவிஜயன், ஒன்றிய குழு தலைவர்கள் லே.ரவிச்சந்திரன், வேல்முருகன், என்.இ.சத்தியானந்தம் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கள்ளக்கூட்டணியைக் காப்பாற்ற இரட்டை வேடம் போடும் அ.தி.மு.க.!

## சட்டத்துறை அமைச்சர் ரகுபதி பதிலடி!

சென்னை, மார்ச். 7-

தனது கள்ளக் கூட்டணியைக் காப்பாற்ற இரட்டை வேடம் போடுகிறது அ.தி.மு.க. என சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தொகுதி மறுசீரமைப்பின் பெயரால் தமிழ்நாட்டிற்கு ஏற்படப்போகும் பேராபத்தை உணர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் நடத்திய அனைத்துக் கட்சி கூட்டம் மிகப்பெரிய வெற்றியை பெற்றிருக்கிறது.

கட்சி வேறுபாடுகளைத் தாண்டி தமிழ்நாட்டின் ஒற்றுமைக்குரலை வெளிப்படுத்த வேண்டும் எனும்



முனைப்போடு முதலமைச்சர் தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்தார்.

தமிழர்களுக்கு எதிரியான பா.ஜ.க.வும் அதன் எடுபிடிகள் சிலரையும் தவிர அனைவரும் பங்கெடுத்து முதலமைச்சரின் முன்னெடுப்பிற்கு ஆதரவு கொடுத்துள்ளனர்.

அ.தி.மு.க.வும் கூட்டத்தில் கலந்து கொண்டு ஆதரவு கொடுத்தது, ஆனால் செய்தியாளர்களை சந்தித்த ஜெயக்குமார் தி.மு.க. நாடகம் நடத்துகிறது என மாற்றிப் பேசுகிறார்.

தனது கள்ளக்கூட்டாளி பா.ஜ.க.வுடன் இணைந்து தமிழ்நாட்டின் உரிமைகளை அடகுவைத்து அடிமை ஆட்சி நடத்திய அ.தி.மு.க. இதனை சொல்வதற்கு எதாவது தகுதியிருக்கிறதா?

அனைத்துக் கட்சி கூட்டத்தில் பங்கெடுக்காமல் போனால் தமிழ்நாட்டு மக்களிடம் அம்பலப்பட்டு விடுவோமோ எனும் அச்சத்தில் கூட்டத்தில் கலந்து கொண்டு அ.தி.மு.க. நாடகம் நடத்தியிருக்கின்றது, என்பதையே ஜெயக்குமாரின் பேச்சு காட்டுகிறது.

பா.ஜ.க.வுடன் இணைந்து நீங்கள் நடத்தும் கபட நாடகம் என்றைக்கும் வெற்றி பெற போவதில்லை, உங்களைப் போன்ற அடிமைகளை மக்கள் நம்ப போவதுமில்லை.

முதலமைச்சரின் தலைமையில் தமிழ்நாடு போராடும், தனது உரிமையை வெல்லும்!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி, திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றியம், ஆவிக்கொளப்பாக்கம் ஊராட்சியில் உள்ள அரசுப் பள்ளியில் ஒன்றியச் செயலாளர் மு.தங்கம் தலைமையில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள், எழுதுகோல், உள்ளிட்ட கல்வி உபகரணங்களுடன் இனிப்புகளை வழங்கினார். டி.என்.முருகன், டி.செல்வராஜ், ஆர்.கோபிகிருஷ்ணன், ராயல் எஸ் அன்பு, பாலமுருகன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் ஆகியோர் ஆணைக்கிணங்க திருக்கோவிலூர் தொகுதி அரங்கண்டநல்லூர் பகுதியில் மாபெரும் விளையாட்டு ஸ்டேடியம் அமைப்பதற்கான மைதானத்தை வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மாவட்ட ஆட்சியர் சேக் அப்துல் ரகுமான், வட்டாட்சியர் உள்ளிட்ட வருவாய் மற்றும் ஊரக வளர்ச்சி துறை அதிகாரிகள், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், தயா இளந்திரையன், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் மு.தங்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.செல்வராஜ், ஒன்றிய செயலாளர் அ.சா.ஏ.பிரபு , பேரூராட்சி மன்ற தலைவர் எஸ்.அன்பு, பேரூர் செயலாளர் சுந்தரமூர்த்தி, நகர செயலாளர் கோபி கிருஷ்ணன், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப.அன்பரசு, துணைத்தலைவர் குணா உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

### வேலூர் மாவட்ட தி.மு.க. சார்பில்

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 72 வதுபிறந்த நாள் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை! ஏ.பி.நந்தகுமார் தலைமை!

வேலூர், மார்ச்,7-

வேலூர் மாவட்ட திமுக, அணைக்கட்டு சட்ட மன்ற தொகுதி திமுக சார்பில் கழக தலைவர், தமிழ் நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 72வதுபிறந்த நாள் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நாளை வேலூர் ஒன்றியம் தெள்ளூர் குளத்து மேட்டில் (8.2.2025) நடக்கிறது.

கூட்டத்திற்கு மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் தலைமை தாங்குகிறார்.

ஒன்றிய கழக செயலாளர் சி.எல்.ஞானசேகரன், மாவட்ட ஊராட்சி குழுதலைவர் மு.பாபுஒன்றிய கழக செயலாளர்கள் பி. வெங்கடேசன், கோ.குமாரபாண்டியன் ஆகியோர் அனைவரையும் வரவேற்று பேசுகிறார்கள்.

கணியம்பாடிதெற்கு ஒன்றிய கழக செயலாளர் என்.கஜேந்திரன், தொரப்பாடிபகுதி கழக செயலாளர் ஆர்.கே.ஐயப்பன், அல்லாபுரம் பகுதி கழக செயலாளர் சி.எம்.தங்கதுரை, பள்ளிகொண்டா பேரூர் செயலாளர் டி.எம். ஜாகீர் உசேன்,ஒடுக்கத்தூர் பேரூர் கழக செயலாளர் ஆர்.பெருமாள் ராஜா, பென்னாத்தூர் பேரூர் கழக செயலாளர் பி.அருள்நாதன்ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள். நிகழ்ச்சியில் பொதுப் பணித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டகுழு உறுப்பினர் எ.வ.வேலு கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றி1072 பெண்களுக்கு சேலையும் 1072ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடையும் வழங்குகிறார்.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுலு விஜயன், மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன், மாவட்ட கழக துணை செயலாளர்கள் மலர்விழி லோகநாதன், ஜி.எஸ்.அரசு, பேராசிரியர் எம்.பிரபாத் குமார், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் துணை மேயர் எம்.சுனில் குமார், தலைமை பொதுக் குழு உறுப்பினர்கள் சுஜாதா சதிஷ்பாபு ரா.சி. மணிமாறன், ஒன்றிய குழு தலைவர்கள் அமுதா ஞானசேகரன் சி. பாஸ்கரன், மண்டல குழு தலைவர் எஸ்.வெங்கடேசன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அமைப்பாளர் ஜெ. திவாகர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் என்.பிரகாஷ், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள்.

முடிவில் வேலூர் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் கே.கே. சுரேஷ்பாபு நன்றி கூறுகிறார். மற்றும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் என்.பிரகாஷ் மற்றும் ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், தலைமை கழக நிர்வாகிகள், மாநில மற்றும் மாவட்ட சார்பு அணியின் நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள்.





